23-7-1990 ஆம் நாளிட்ட தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை அரசு நிலை ஆணை எண் 155-ன் கீழ் 5 பேர்கள், 1993 ஆம் ஆண்டு தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை அரசு நிலை ஆணை எண் 221-ன் கீழ் 13 பேர்கள். ஆக 223 பேர்களும், மொழி நலம் தொடர்பாக 22 பேர்களும் ஆக 245 பேர்கள் இத் திட்டத்தின்கீழ் அந்த மாவட்டத்திலே பயன் அடைந்திருக்கிறார்கள். நிதிநிலை அடிப்படையிலேதான் அரசு இதைச் செய்ய முடியும். நிதிநிலைக்கேற்ப விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

7. அறிக்கைகள் அளித்தல்

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. என். ஆர். ராஜேந்திரன், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் சார்பாக அளிப்பார்.

* **திரு. என். ஆர். ராஜேந்திரன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் 40 மற்றும் 41-வது அறிக்கைகளை குழுத் தலைவரின் சார்பாக பேரவைக்கு அளிக்கின்றேன்.

8. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1985–86, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1985-86 ஆம் ஆண்டுக்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1985-86 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின் கீழ் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்திற்குமேல் சில இனங்களில் மிகையாகச் செலவிடப்பட்டுள்ளது எனத் தெரிய வந்துள்ளது. அந்த ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை இம் மாமன்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன்.

2. பொதுக்கணக்குக் குழு, 1985-86 ஆம் ஆண்டு நிதியொதுக்கக் கணக்குகளை ஆய்வு செய்ததில் சில மானியங்களின்கீழ் அனுமதிக்கப்பட்ட தொகைக்குமேல் செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளது. இந்த மிகைச் செலவிற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு 1985-86 ஆம்

ஆண்டில் ஒவ்வொரு மானியத்தின் கீழும் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்குமேல் செய்யப்பட்ட செலவுகளுக்கு ஒப்புதல் பெறுவதற்காக, சட்டப் பேரவை முன் மானியக் கோரிக்கைகள் வைக்கப்படலாமென்று பொதுக்கணக்குக் குழு பரிந்துரைத்துள்ளது. அவ்வாறே, 1985-86 ஆம் ஆண்டு மிகைச் செலவுகளைச் சரிகட்டுவதற்கான மானியக் கோரிக்கைகள், தற்போது தாக்கல் செய்யப்படுகின்றன. இம் மிகைச் செலவு, மொத்தம் 20.13 கோடி ரூபாயாகும். மேற்சொன்ன ஆண்டில், "பழங்குடியினர் மற்றும் ஆதிதிராவிடர் முதலியோர் நலன்", "ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்" மற்றும் "இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்" என்பவைகளின் கீழ் பெருமளவில் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

3. தமிழ்நாடு நான்காம் சம்பளக் குழுவின் பரிந்துரைகளை ஒட்டி, பணியாளர்களுக்குச் சம்பளம் மற்றும் படிகள் தொடர்பான நிலுவைத் தொகைகளைப் பெற்று வழங்கியதால் "பழங்குடியினர் மற்றும் ஆதி திராவிடர் முதலியோர் நலன்" என்பதன் கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது. தவறான வகைப்பாடுகளைச் சரி செய்ததாலும் மிகைச் செலவு ஏற்பட்டது.

4. ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததாலும், வழங்கத்தக்க குறைந்த அளவு ஓய்வூதியத் தொகை, உயரளவு வழங்கத்தக்க குடும்ப ஓய்வூதியத் தொகை மற்றும் இறப்பு-ஓய்வு காலப் பணிக் கொடைத் தொகையின் அளவு ஆகியவற்றை உயர்த்தியதாலும் "ஓய்வூதியங்கள் மற்றும் ஏனைய ஓய்வுகால நன்மைகள்" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது. ஓய்வூதியத் தொகைக்கான உயரளவு உச்ச வரம்பை அகற்றியதும், இவ்வுயர்வுக்குக் காரணமாகும்.

5. தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டம், தமிழ்நாடு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதிச் சட்டங்கள் ஆகியவற்றின் கீழ் வசூல் அதிகரித்ததன் அடிப்படையில் உள்ளாட்சி மன்றங்களுக்குக் கூடுதல் தொகை ஒதுக்கியதாலும், முந்தைய ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட தொகைகளை உள்ளாட்சி மன்றங்கள் 1985-86 இல் பெற்றதாலும், "இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது. மேலும், முதல் மற்றும் தேர்வுநிலை நகராட்சிகளுக்கு கூடுதல் வீதத்தில் நிகர வருவாய் ஒதுக்கியுள்ளதும், மிகைச் செலவுக்குக் காரணமாகும்.

6. 1985-86 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான இம் மானியக் கோரிக்கைகளுக்கு ஒப்புதல் அளிக்குமாறு இப் பேரவையை வேண்டி அமர்கிறேன்.

வணக்கம்.

1985-86 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான கூடுதல் மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)
A.	வருவாய் கணக்கில் செலவு–	
2.	மாநில ஆயத் தீர்வைத் துறை	7,33
11.	மாவட்ட நிருவாகம்	66,74
13.	நீதி நிருவாகம்	70,61
20.	வேளாண்மை	64,09
22.	கால்நடை வளர்ப்பு	18,12
31.	பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்	1,57,74
33.	வீட்டுவசதி	58,94
34.	நகர்ப்பகுதி வளர்ச்சி	4,58
39.	சாலைகளும் பாலங்களும்	47,93
40.	சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும்	7,71
42.	ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்	7,60,72
46.	இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்	6,67,57
மொத்தம்– **A.**	வருவாய்க் கணக்கில் செலவு ..	**19,32,08**

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)
B.	வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு–	
54.	சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு	1,42
55.	சாலைப் போக்குவரத்துப் பணிகள்-கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு.	79,91
மொத்தம்-**B.**	வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு.	**81,33**
	பெரு மொத்தம்	**20,13,41**

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS